Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 18/2023** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW10** |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | கருப்பையா |
| Father Name | : | முத்துக்கருப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.09.2024.

<u>(1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2 எதிரிகள் சார்பில் – பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் காரிக்கூட்டம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். தங்கவேலு என் பக்கத்து வீட்டுக்காரர். 2008–ல் ஒருநாள் இரவு சுமார் 10.00 அல்லது 10.30 மணிக்கு சாப்பாடு வாங்குவதற்காக வழுதூர் விலக்கு ரோட்டிற்கு நானும், தங்கவேலுவும் சென்றோம். அப்போது விலக்கு ரோட்டில் கேணிக்கரை போலிஸ்காரர்கள் வந்தார்கள். அவர்கள் அந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டு படம் வரைந்தார்கள். எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். அதனால் நானும், தங்கவேலுவும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் முதலில் இருப்பது என் கையெழுத்துதான். பார்வை மகசரில் உள்ள சாட்சியின் முதல்

கையொப்பம் **அ.சா.ஆ.12/அ.சா.10**. என் கையெழுத்துக்கு கீழே இருப்பது தங்கவேலுவின் கையெழுத்து. போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

கையெழுத்து போட்ட தேதி, மாதம் எனக்கு தெரியாது. கையெழுத்து எதற்கு போட்டேன் என்றும் அது என்ன வழக்கிற்காக போட்டேன் என்றும் எனக்கு தெரியாது. 15 வருடங்களுக்கு முன்பாக அந்த இடத்தில் இரவு 08.00 மணிக்குமேல் ஆள்நடமாட்டம் இருக்காது என்றும், கடைகளை அடைத்துவிடுவார்கள் என்றும் சொன்னால் சரிதான். வாணிவிலக்கிலிருந்து காரிக்கூட்டம் கிராமம் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். காலையில் வேலைக்குச் சென்றால் மாலை 05.00 மணியிலிருந்து 06.00 மணிக்குள் வீட்டிற்கு வந்துவிடுவேன் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடம் பற்றி எனக்கு தெரியாது. வாலாந்தரவை விலக்கு ரோடு என்பதும், வாணி விலக்கு ரோடு என்பதும் வேறுவேறு என்று சொன்னால் சரிதான். நான் எனது ஊருக்கு செல்வதற்கு வலாந்தரவை விலக்கு ரோட்டிற்கு செல்லவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் காவல்நிலையத்திற்கு அடிக்கடி செல்வேன் என்றும், அப்பொழுது ஒருநாள் காவல்நிலையத்திற்கு சென்றபோது ஒரு காவலர் கேட்டுக்கொண்டதன்பேரில் ஒரு எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரிதான். அப்படி கையெழுத்து போட்டதை தற்போது காவலர் கேட்டுக்கொண்டதன்பேரில் அவர் சொல்லிக்கொடுத்தவாறு சாட்சியம் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**.